வனத் துறை நடத்திய மாவட்ட அளவிலான போட்டிகளில் டிரினிடி கல்லூரி மாணவியர் சிறப்பிடம்

நாமக்கல் சரக வனத் துறையானது மாவட்ட அளவிலான ஓவியம், கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகளை பள்ளி மற்றும் கல்லூரி மாணவியருக்கு அண்மையில் நடத்தியது. இதில் நாமக்கல் மாவட்டத்திலுள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களில் இருந்து மாணவர்கள் மிக ஆர்வமாக கலந்து கொண்டனர்.

இதில் கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகளில் நாமக்கல் - டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மாணவி பி. மோனிகாஸ்ரீ மனித வள உயிரினங்களுக்கு இடையேயான சக வாழ்வு என்ற தலைப்பில் நடைபெற்ற ஆங்கிலம் பேச்சுப் போட்டியில் முதல் பரிசினை வென்றார். மேலும், இதே தலைப்பில் நடைபெற்ற தமிழ் கட்டுரைப் போட்டியில் வீ. சந்தியா இரண்டாம் பரிசினையும், தமிழ்ப்பேச்சுப்போட்டியில் எஸ். பி. ஸ்ரீ சக்தி சமய சங்கரி 3-ம் பரிசினையும், வன உயிரினங்கள் பாதுகாப்பில் நமது பங்களிப்பு மற்றும் வன உயிரினங்களை பாதுகாத்தலின் அவசியம் என்ற தலைப்பில் நடைபெற்ற ஆங்கில ஓவியப் போட்டியில் கே. சித்தார்த்தி 3-ம் பரிசினையும் பெற்றுள்ளார்.

இதற்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசு வழங்கும் விழா 29.11.22 அன்று நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவகத்தில் நடைபெற்றது. இதில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் ஸ்ரேயா பி சிங், மாவட்ட வருவாய் அலுவலர் எம். மணிமேகலை, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பி. மகேஸ்வரி, மாவட்ட வன அலுவலர் கே. ராஜாங்கம், வனத்துறை அலுவலர்கள் வீ. அல்லிராஜ், என். பெருமாள் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற டிரினிடி கல்லூரி மாணவியரைப் பாராட்டினர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற நான்கு மாணவியர் மற்றும் இப்போட்டிகளில் கலந்து கொண்ட ஆர். தவநிதி மற்றும் டி. சரண்யா ஆகியோருக்கு கல்லூரி வளாகத்தில் பாராட்டு விழா 30.11.2022 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே செங்கோடன், செயலர் கே. நல்லுசாமி, செயல் இயக்குநர் அருணா செல்வராஜ், முதல்வர் எம். ஆர். லட்சுமிநாராயணன், இயக்குநர் உயர்கல்வி அரசுபரமேசுவரன், நிர்வாக அலுவலர் என்.எஸ். செந்தில்குமார், பேராசிரியப் பெருமக்கள் பி. லேனா, எம். சசிகலா, டி.கே. அனுராதா, ஆர். சாவித்திரி, பி. உமாபாரதி, வீ. அர்ச்சனா ஆகியோர் கலந்து கொண்டு போட்டிகளில் சாதனைப் படைத்த மாணவியரை பாராட்டினர்.

30/11/2022

Principal,
Trinity College for Women (Arts & Science),
Namakkal - 637 002.